(This question paper contains 2 printed pages)

Roll No.

Sl. No of Question Paper: 3767

Unique Paper Code: 72082807

Name of the Paper: Language Communications, Mode of Communications, Reading & Understanding FC

Name of the Course: Ability Enhancement Compulsory Course-I (Tamil)

Semester: I

Time 3.00 Hours

Max. Marks 75

1. இரயிலில் பயணிக்கும்போது அருகிலுள்ள பயணி ஒருவரோடு உரையாடும் வகையில் அமைந்த ஓர் உரையாடலை எழுதுக.

(அல்லது) 10

'பெண் கல்வி' குறித்து ஐந்துபேர் அடங்கிய ஒரு குழு விவாதிப்பதாக அமைந்த ஒரு விவாதத்தை எழுதுக.

2. நேர்காணல் என்றால் என்ன? அதன் அமைப்பை விவிரிக்க.

(அல்லது) 10

தமிழ் இலக்கியவாதி ஒருவரை நேர்காணும்போது தாங்கள் கேட்க விரும்பும் ஐந்து கேள்விகளையும் அதற்கு அவர் தரும் பதிலையும் எழுதுக.

3. கடிதத்தின் வகைகளை விவரிக்க.

(அல்லது) 10

உமக்குத் தேவையான நூற்களை பதிவுத் தபாலில் அனுப்பித் தரும்படி சென்னையிலிருக்கும் ஒரு புத்தக வெளியீட்டாருக்கு ஒரு கடிதம் வரைக.

4. ஆற்றல் மிகுந்த பேச்சுக்கான கூறுகளை விவரிக்க.

(அல்லது) 15

'இந்தியாவில் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துதல்' குறித்து மேடைப் பேச்சு ஒன்றைத் தயாரிக்க.

5. தமிழ் மொழிபெயர்ப்பின் வரலாற்றை விளக்குக.

(அல்லது) 15

கீழ்வரும் பத்தியைத் தமிழில் மொழிபெயர்க்க:

The narration in akaval meter moves on in Manimekalai without the relief of any lyric, which are the main features of Silappadikaram. Manimekalai in puritan terms is not an epic poem, but a grave disquisition on philosophy. There are effusions in the form of a song or a dance, which style may not go well with western audience as they are assessed to be inspired on the spur of the

moment. According to Calcutta review, the three epics on the whole have no plot and no characterization for an epic genre. The plot of Civaka Cintamani is monotonous and deficient in variety in strength and character and does not stand the quality of an epic.

6. பின்வரும் பத்தியைப் படித்து கேட்கப்பட்டிருக்கும் கேள்விகளுக்குத் தக்க விடை தருக: 15

சைவத் தமிழ் இலக்கிய வரிசையில் குறிப்பிடத்தக்க பழமையான நூல் கல்லாடம் ஆகும். 'கல்லாடம் கற்றவனோடு சொல்லாடாதே' என்பது இந்நூலைக் கற்றவரின் ஆற்றலைக் குறிக்கும் ஒரு பழமொழி. கல்லாடர் என்பவர் இந்நூலை இயற்றினார். இந்நூல் கடைச்சங்க காலத்திற்கும் தேவார ஆசிரியர்கள் காலத்திற்கும் இடைப்பட்ட காலப்பகுதியைச் சார்ந்தது. பிற்காலத்தில் சைவ சமயம் சார்ந்த கோவை நூல்கள் தோன்றுவதற்குக் கல்லாடம் வழிவகுத்தது. நூறு அகப்பொருள் துறைகளை விளக்கும் போக்கில் இந்நூல் அமைந்துள்ளது. இந்நூல் மதுரையில் எழுந்தருளியிருக்கும் இறைவன் நிகழ்த்திய திருவிளையாடல்களையும் நகரச் சிறப்புகளையும் விரித்துரைக்கிறது.

1. கல்லாடம் குறித்த பழமொழி யாது?

2. கல்லாடம் எக்காலத்தைச் சார்ந்தது?

3. கல்லாடம் எத்தகைய நூல்களுக்கு முதல்நூல் ஆகும்?

4. கல்லாடத்தின் அமைப்பையும் சிறப்பையும் எடுத்தெழுதுக.

5. இப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பைச் சூட்டி அதன் சாரத்தை எழுதுக.